RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-65 | 11 மார்ச் | செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## மீனவர்களுக்கு மானிய விலையில் 'லைஃப் ஜாக்கெட்' மீன்வளத் துறை அதிகாரிகள் தகவல்

சென்னை, மார்ச்.11

"தமிழகத்தில் உள்ள நாட்டுப் படகு உரிமையாளர்களுக்கு 'லைஃப் ஜாக்கெட்' எனப்படும் உயிர்காக்கும் கவச உடை, மானிய விலையில் வழங்கப் படுகிறது." என மீன்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இத்திட்டத்தின் மூலம், தமிழகத்தின் 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 10 ஆயிரம் நாட்டுப் படகு உரிமையாளர்கள் பயன் பெறுவர் என்றும் கூறியுள்ளனர்.

இதுகுறித்து, மீன்வளத் துறை அதிகாரிகள் கூறியதாவது: கடலில் மீன்பிடிக்கும் போது இயற்கை சீற்றங்கள் அல்லது விபத்து உள்ளிட்ட காரணங்களால் படகு கவிழ்ந்து அல்லதுபடகில் செல்லும்போது தவறி விழுந்து மீனவர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. அதைத் தவிர்க்க படகில் செல்லும் அனைவரும் கட்டாயம் உயிர் காக்கும் கவச உடையான 'லைஃப் ஜாக் கெட்'டை அணிய வேண்டும் என அரசு அறிவுறுத்தி உள்ளது.

இதற்காக, நடப்பு நிதியாண்டில் 40 ஆயிரம் லைஃப் ஜாக்கெட்டுகள் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதைப் பெற பதிவு செய்யப்பட்ட நாட்டுப் படகு வைத்திருப்போர் அந்தந்த மாவட்ட மீன்வள அலுவலகங்களில் விண்ணப் பிக்க வேண்டும். ஒரு படகுக்கு 4 லைஃப் ஜாக்கெட்டுகள் வழங்கப்படும். ஒன்றின் விலை ரூ.2,472. இதில், 75 சதவீதம் மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தில், தமிழகத்தின் 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 10 ஆயிரம் நாட்டுப் படகு உரிமையாளர்கள் பயன் பெறுவர். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.




## 'திமுகவினர் நாகரீகமற்றவர்கள்'சர்ச்சையாக பேசிய மத்திய அமைச்சர் தர்மேந்திரபிரதான்! திமுக எம்.பிக்களின் கடும் எதிர்ப்பால் வாபஸ் பெற்றார்

புதுடில்லி, மார்ச்.11

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு இன்று தொடங்கியது. இதில், மக்களவையில் திமுக எம்.பிதமிழச்சிதங்கபாண்டியன், தமிழ்நாட்டுக்கான மத்திய அரசின் கல்வி நிதி மறுக்கப் படுவது குறித்துகேள்வியெழுப் பினார்.




தன்னுடைய உரையில் தமிழச்சி தங்கபாண்டியன், "தமிழ்நாடு அரசு தேசிய கல்விக் கொள்கையை எதிர்ப்பதால், பி.எம் ஸ்ரீ திட்டத்தின் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு தருவதாக உறுதியளிக்கப்பட்ட ரூ. 2,000 கோடியை வேறு மாநிலங்களுக்கு பகிரப்படு கிறது. மத்திய அரசின் இந்த செயல் கூட்டாட்சி தத்துவது எதிரானது. பள்ளி கல்விக்கு ஒதுக்கப்படும் நிதியை, மாநிலத்துக்கு எதிராக பழிவாங்கும் கருவியாக பயன் படுத்தப்படுகிறது. இது பள்ளி மாணவர்களின் கல்வியைப் பாதிக்கிறது. தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள் ளாத மாநிலங்களுக்கு நிதி நிறுத்தப்படுவது தடுக்கப்பட வேண்டும் என நாடாளுமன்றம் உறுதிசெய்ய வேண்டும்."என்று கோரிக்கை விடுத்தார்.

அதற்குப் பதிலளித்த மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திரா பிரதான், "திமுக நேர்மையற்றது. தமிழக மாணவர்கள் மீது அவர்களுக்கு அக்கறை இல்லை. மாணவர் களின் எதிர்காலத்தை அவர்கள் பாழாக்குகின்றனர். மொழிப் பிரச்னை செய்வது மட்டுமே அவர்களின் வேலை. அதில்தான் அரசியல் செய் கிறார்கள். அவர்கள் (திமுக) ஜனநாயகமற்றவர்கள், நாகரீக மற்றவர்கள்." என்று விமர்சித் தார்.

இந்த நிலையில் திமுக எம்.பிக்கள் கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திரா பிர தானின் பேச்சுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் தர்மேந்திரா பிரதான், தனது பேச்சு புண்படுத்தி இருந்தால், வருத்தம் தெரிவிப்பதாக தெரி வித்துள்ளார். மேலும் தனது பேச்சை வாபஸ் பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## 'எனக்கு அளிக்கப்பட்ட அரசு மரியாதைக்கும், மக்களின் அன்புக்கும் நன்றி' சென்னை திரும்பிய இளையராஜா நெகிழ்ச்சி

சென்னை, மார்ச்.11

ஆசிய கண்டத்தில் இருந்து சிம்பொனியை எழுதி, அரங்கேற் றிய முதல் இசையமைப்பாளர் எனும் சாதனையை படைத்து தமிழகம் திரும்பிய இசையமைப் பாளர் இளையராஜாவுக்கு அரசு மரியாதையுடன் வரவேற்பு நல்கப்பட்டது. அப்போது அவர், "அரசு மரியாதைக்கும், மக்களின் அன்புக்கும் நன்றி" என நெகிழ்ச்சி பொங்கக் கூறினார்.




முன்னதாக இசையமைப் பாளர் இளையராஜா, தனது முதல் சிம்பொனி இசையை லண்டனில் அரங்கேற்றம் செய் தார். அங்குள்ள ஈவென்டிம் அப்போலோ அரங்கில் சிம் பொனி இசையை அரங்கேற் றம் செய்தார். உலகின் மிகச் சிறந்த ராயல் பில்ஹார்மோனிக் இசைக்குழுவுடன் இணைந்து அவர் அதை அரங்கேற்றினார்.

நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு நேற்று (மார்ச் 10) காலை சென்னை விமான நிலையம் வந்தடைந்தார். அவரை தமிழக அரசின் சார்பில் அமைச்சர் தங்கம் தென்னரசு வரவேற்றார். தொடர்ந்து பேசிய அமைச்சர், "தனது வாழ்நாள் விருப்பத்தை நிறைவேற்றி இந்தியாவுக்கு மட்டுமின்றி ஆசிய கண்டத்துக்கே பெருமை சேர்த்து திரும்பியுள்ளார் இசைஞானி இளையராஜா.

அவரை, தமிழக மக்கள் சார்பாக உரிய மரியாதையுடன் வரவேற்கக் முதல்வர் ஸ்டாலின் எனக்கு வலியுறுத்திக் கூறி யிருந்தார். இன்று அரசின் சார்பாக நான் வந்துள்ளேன். மிகுந்த பெருமிதத்தோடு தமிழக மக்கள் சார்பில் நாம் அவரை வரவேற்கிறோம். நம் அனைவருக்கும் இளையராஜா ஒரு பெருமித அடையாளம்." என்றார். தொடர்ந்து பாஜக, விசிக பிரமுகர்களும், திரைப் பிரபலங்களும் இளையராஜாவை வாழ்த்திப் பேசினர்.

தொடர்ந்து இளையராஜா பேசியதாவது: அனைவருக்கு நன்றி. என்னை நீங்கள் அனை வரும் மலர்ந்த முகத்தோடு வழியனுப்பி வைத்தீர்கள். அத்துடன் இறைவன் ஆசிர்வதித் தார். சிம்பொனி நிகழ்ச்சியை சிறப்பாக முடித்துத் திரும்பி யுள்ளேன்.

இசைக் குறிப்பை யார் வேண்டுமானாலும் எழுதிடலாம். அவ்வாறாக எழுதிக் கொடுத்தால் அதை யார் வேண்டுமானாலும் வாசித்துவிடலாம். ஆனால், அதை வாசிப்பவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி வாசித்தால் என்னவாகும். அப்படி ஆகிவிடாமல் லண்டனில் கண்டக்டர் மைக்கேல் டாம்ஸ் சிறப்பாகச் செய்துதந்தார். நான் இங்கிருந்து லண்டன் சென்றதும் ஒரே ஒரு ஒத்திகையில் கலந்து கொள்ளவே நேரமிருந்தது. சிம்பொனி அரங்கேற்றத்தில் அதன் விதிமுறைகளை மீறி விடக்கூடாது. அதைப்பின்பற்றி 80 இசைக் கலைஞர்களும் ஒன்றிணைந்து மியூஸிக் கண்டக்டரை கவனிக்க வேண்டும். அவ்வாறாக ஒவ்வொரு ஸ்வரத்திலும் அவர்கள் கவனத்தை குவித்து வாசித்தபோது கேட்பவர்கள் மூச்சுவிட மறந்து ரசித்தனர்.

மொத்தத்தில் இந்த சிம்பொனி இசை வல்லுநர்கள் பாராட்டிய சிம்பொனியாகியுள்ளது. அது உங்களின் வாழ்த்து. இதை நான் அரங்கேற்றியது தமிழகத்துக்கும், இந்தியா வுக்கும் பெருமை.

மேலும், முதல்வர் அரசு மரியாதையோடு வரவேற்றது நெகிழ்ச்சியாக உள்ளது. அதேபோல், தமிழக மக்களின் வாழ்த்தும், வரவேற்பும் எனக்குப் பெருமையாக இருக்கிறது.

என் மீது மக்களாகிய நீங்கள் அதீத அன்பு வைத்துள்ளீர்கள். என்னை, இசைக்கடவுள் எனக் கூறுகிறீர்கள். நான் சாதாரண மனிதன், என்னைப் பற்றி எனக்கு எந்த எண்ணமும் இல்லை. சொல்லப்போனால் நீங்கள் என்னைக் கடவுள் என்று அழைக்கும்போது, கடவுளை ஏன் இளையராஜா அளவுக்கு இறக்குகிறார்கள் என்றே நினைப்பேன். இந்த சிம்பொனி நிகழ்ச்சி ஒரு ஆரம்பம். 82 வயதாகிவிட்டது, இப்போது என்ன ஆரம்பம் என நினைக்காதீர்கள். நீங்கள் நினைக்கும் எந்த அளவிலும் நானில்லை.

பண்ணைபுரத்தில் வெறுங் காலில் நடந்தேன். வெறுங்காலுடன் தான் இங்கே வந்தேன். இன்று சிம்பொனி இசைத்து வந்துள்ளேன். முடிந்தால், இளைஞர்கள் என்னை முன்மாதிரியாக வைத்து அவரவர் துறையில் முன்னேறி நாட்டுக்கு நலம் சேர்க்க வேண்டும். இதுவே எனது அறிவுரை." என்றார்.

## நாவடக்கம் தேவை முதல்வர் பதிலடி

சென்னை, மார்ச்.11

தர்மேந்திரா பிரதானுக்கு எதிராக தமிழக முதல்வர் ஸ்டாலின் பதிவு ஒன்றைப் பதிவிட்டிருக்கிறார்.

அந்தப் பதிவில், "தமிழ்நாட்டின் நிதியைத் தராமல் ஏமாற்றும் நீங்கள் தமிழ்நாட்டு எம்.பி.க்களைப் பார்த்து அநாகரிகமானவர்கள் என்பதா? தமிழ்நாட்டு மக்களை அரசு அனுப்பிய PM SHRI MoU முற்றிலுமாக அவமானப்படுத்துகிறீர்கள் நாங்கள் மக்களின் எண்ணங் களுக்கு மட்டுமே மதிப்பளித்துச் செயல்படுகிறோம்! உங்களைப் போல நாக்பூரின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு அல்ல!! நாங்கள் உங்கள் திட்டத்தைச் செயல்படுத்த முன்வரவும் இல்லை, அப்படி முன்வராத என்னை யாரும் வற்புறுத்தவும் முடியாது தமிழ்நாட்டு மாணவர்களுக்குரிய நிதியை, எங்களிடம் இருந்து வசூல் செய்த வரியை விடுவிக்க முடியுமா முடியாதா என்பதற்கு மட்டும் பதில் கூறுங்கள்" என பதிவிட்டுள்ளார்.





திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் முத்தூர் மேட்டுக்கடை என்.எஸ்.பி திருமண மண்டபத்தில் வருவாய்த் துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் சாமிநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் அவர்களிடம் தனது சொந்த நிதியிலிருந்து 5 செண்ட் நிலத்தை அவரது மகன் ஆதவன் பெயரில் நாகப்பாளையம் ஆதிதிராவிடர் காலணியை சார்ந்த 95 பட்டாதாரர்கள் பயன்பெறும் வகையில் சாலை வசதிக்காக வழங்கினார்.உடன் திருப்பூர் மாநகராட்சி நான்காம் மண்டல தலைவர் பத்மநாதன், முத்தூர் பேரூராட்சி தலைவர் சுந்தராம்பாள் ஆகியோர் உடனிருந்தனர்..

## திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை. துணை பொறியாளர் மேற்பார்வையில் புதிய பாலம் அமைக்கும் பணி தீவிரம்



திருப்பூர். மார்ச் 11

திருப்பூர் நெடுஞ்சாலை வடக்கு. உட்கோட்டத்திற்கு உட்பட்ட மாநில நெடுஞ்சாலை யான திருப்பூர் காங்கயம் பகுதியில் ,நல்லூர் நால்ரோடு சந்திப்பு அருகில் , பொது மக்களின் நீண்ட நாள் கோரிக் கைக்கு இணங்க. மேற்படி இப்பகுதியில் போக்குவரத்து அதிகமாக உள்ளதால். வாகனங் களில் நெரிசல்கள் ஏற்படுகிறது.

மேலும், மழைக்காலங்களில், மழை நீர், மற்றும் கழிவு நீர், சாலை ஓடுதளத்தில் தேங்கு வதால் மழை நீர் தேங்காத வண்ண மாக அப்பகுதியில் சிறு பாலம் அமைக்கும் பணி துரித வேகத்தில் நடைபெற்று வருகிறது இந்தப் பாலம் 4.8 கிலோமீட்டர் வரை அமைக் கப்படுகிறது மக்களின் பயன்பாட்டிற்கு மிக விரைவாக கோட்ட பொறியாளர் விஜய குமார் மற்றும் இளநிலை பொறி யாளர் ராஜேஷ் இவர்கள் மேற்பார்வையில் மிக வேகமாக பணி நடந்து கொண்டு வருகிறது இதற்கு பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் இப்பணியை தந்த அரசுக்கும் அதிகாரிகளுக்கும் மக்கள் நன்றி தெரிவித்து பாராட்டினர்.

## காரைக்குடி வித்யாகிரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா



காரைக்குடி, மார்ச்.11

சிவகங்கை மாவட்டம் காரைக் குடி வித்யாகிரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா மற்றும் விருது வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டம் காரைக் குடியில் பிரபல தனியார் கல்வி நிறுவனமான வித்யாகிரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா மற்றும் விருது வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது., இந்த விழாவிற்கு சிவகங்கை மருத்துவ கல்லூரி பேராசிரியர் டாக்டர் சிவசங்கர் மற்றும் டாக்டர் சுவாதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். வித்யாகிரி கல்வி நிறுவனங்களின் முதன்மை நிர்வாக அதிகாரி ஐஸ்வர்யா சரண் சுந்தர் அனைவரையும் வரவேற்றார்.

பள்ளி முதல்வர் ஹேமமாலினி சுவாமிநாதன் ஆண்டறிக்கை வாசித்தார். தொடர்ந்து பல்வேறு நிலைகளில் சிறப்பிடம் பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இந்த விழா வில் வித்யாகிரி கல்வி நிறுவனங் களின் தலைவர் கிருஷ்ணன் தாளாளர் டாக்டர் சுவாமிநாதன் பொருளாளர் ஹாஜி முகம்மது மீரா மற்றும் ஆசிரிய ஆசிரியைகள் பெற்றோர்கள் ஆகியோர் பெருமளவில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். துணை முதல்வர் சத்தியமூர்த்தி நன்றி கூறினார். பின்னர் நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவேறியது.

## சிவகங்கையில் உலக மகளிர் தின கொண்டாட்டம்



சிவகங்கை மார்ச் 11

சிவகங்கையில் பள்ளி கல்வித் துறை சார்பாக உலக மகளிர் தின கருத்தரங்கம் நடைபெற்றது. சிவகங்கை முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் சம்பத்குமார் தலைமை வகித்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சகாய பிரிட்டோ முன்னிலை வகித்தார். முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாநில மாவட்ட அளவில் கலை திருவிழாவில் வானவில் மன்றத்தில் அறிவியல் கண்காட்சியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சியர் கேடயங்களையும் புத்தகங்களையும் பரிசளித்து வாழ்த்தினார்கள். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை கிளைத்தலைவர் மணவாளன் வரவேற்றார். 150 கங்கு மேற்பட்ட மாணவிகளுக்கு பேராசிரியர் மோகனா எழுதிய அறிவியல் அறிஞர்களின் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

134 புத்தகங்களை எழுதிய எழுத்தாளரும் தமிழ்நாடு அறிவியல் இயக்க மேனாள் மாநில தலைவர் முனைவர் பேராசிரியர் மோகனா மகளிர் தின கருத்துரையாற்றினார். மகளிர் தின வினாடி வினாக்கள் கேட்கப்பட்டு புத்தகம் பரிசளிக்கப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட துணைத்தலைவர் ஆரோக்கியமேரி நன்றி கூறினார்.



திருப்பூர் மாநகராட்சி தெற்கு ரோட்டரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற உலக மகளிர் தின விழாவை முன்னிட்டு மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து பெண் அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு மாநகராட்சி மேயர் ந. தினேஷ்குமார் இனிப்புகள் வழங்கி வாழ்த்துக்களை கூறினார்.உடன் துணை மேயர் பாலசுப்ரமணியம், உதவி ஆணையாளர் (1-2) முருகன், கல்விக்குழு தலைவர் மற்றும் 36வது வார்டு மாமன்ற உறுப்பினர் திவாகரன், உதவி திட்ட அமைப்பாளர் சௌதாமணி உட்பட பலர் பங்கேற்றனர்.

## தாம்பரம் மாநகர திமுக சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் -நலத்திட்ட உதவிகள்

தாம்பரம் மார்ச்.11

தாம்பரம் மாநகர திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நம் உயிரான கழக தலைவர் 72வது பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி மிக எழுச்சியுடன் கோலாக விழா மாநகர கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கழக பொருளாளர் மக்களவை குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி கழக துணை பொதுச்செயலாளர் கழக நாடாளுமன்ற மக்களவை குழுத்தலைவர் ஆ.இராசா எம்.பி. காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ்,





மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், இ.ஜோசப் அண்ணாதுரை, பம்மல் வே.கருணாநிதி, பெருங்களத்தூர் எஸ்.சேகர், இரா.நரேஷ்கண்ணா, வ.விஜயரங்கன், பி.சதாசிவம், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், செம்பாக்கம் இரா.சுரேஷ், ஆ.நடராஜன், ஏ.கே. கருணாகரன், பெர்னாட், க.தேவேந்திரன், ஆர்.எஸ். சங்கர், மு.ரஞ்சன், எல்.பிரபு, வி.ரவிச்சந்திரன், கோ.ஜானகிராமன், சத்தியபிரபு,ரமணி ஆதிமூலம், தி.ச.நடராஜன், இ.மனோகரன், இரா.விஜயகுமார், இரா. செல்வகுமார்,

இரா.ரத்தினகுமார், ஆர்.அகஸ்டின், கோ.தேனுபூரி, டி.கே.தாமஸ், டி.கே.கோட்டி, லலித்ராஜதீபன், டைகர் சிவா, வீ.கார்த்திக், ச.ராஜேஷ், வே.சுப்பிரமணியன், ச.பிரபு, ஜெ.இன்சமாம், மற்றும் மாவட்ட கழக பிரதிநிதிகள், வட்ட கழக செயலாளரகள், பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, உள்ளிட்ட கழக மூத்த முன்னோடிகள், 5000த்திருக்கும் மேற்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கூட்டத்தில் இறுதியில் பகுதி கழக இளைஞர் அணி அமைப்பாளர் மு.சூர்யா நன்றியுரை கூறினார்.

## தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் சார்பில் மகளிர் தின கொண்டாட்டம்

தாம்பரம் மார்ச்11

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் சார்பில் 500க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்ட மகளிர் தின விழா கொண்டாட்டம் பெண் ஆசிரியர்களுக்கு பல்வேறு விளையாட்டுகள் வைத்து நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது

சென்னை தாம்பரம் அருகே வள்ளுவர் குருகுல பள்ளியில் தேசிய மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் தலைவர் கு.தியாகராஜன் தலைமையில் 500க்கும்





மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்ட மகளிர் தின விழா கொண்டாட்டம், விளையாட்டுப் போட்டிகள், கோலப்போட்டிகள், ஓவியப் போட்டிகள் உள்ளிட்டவைகளை விளையாடி பெண் ஆசிரியர் உற்சாகமாக சந்தோஷத்துடன் கொண்டாடினர். பின்னர் சிறப்பு விருந்தினர்களாக தொடக்க கல்வித்துறை இயக்குனர் பூ.ஆ.நரேஷ், பெண் காவல் டிஎஸ்பி நந்தினி,முதன்மை கல்வி அலுவலர் கற்பகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு தேசிய மகளிர் தின விழா உரையாற்றினார்.

முடிவில் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு பொன்னாடை போர்த்தி நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

150 மேற்பட்ட துப்பரவு பெண் பணியாளர்களுக்கு புடவைகள் உள்ளிட்ட நல திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

## பெரியகுளத்தில் பேங்க் ஆஃப் இந்தியா புதிய கிளை திறப்பு விழா







பெரியகுளம் மார்ச் 11

தேனி மாவட்டம் பெரியகுளம் மதுரை ரோட்டில் உள்ள ஜே.சி பெட்ரோல் பல்க் அருகில் பேங்க் ஆஃப் இந்தியா புதிய கிளை திறப்பு விழா நடைபெற்றது. இந்த திறப்பு விழாவிற்கு ராஜபாளையம் நாச்சியார் குழுமத்தின் நிறுவனர் ஆறுமுகப் பெருமாள் பாலசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். பெரியகுளம் கிளை மேலாளர் ராஜசேகர் வரவேற்று பேசினார். மதுரை மண்டல மேலாளர் கிஷோர் குமார்,மதுரை மண்டல துணை மேலாளர் ஸ்ரீ ஹர்ஷாய் எம் ஜாய்ஸ், பேங்க் ஆஃப் இந்தியா அதிகாரிகள் நல சங்க தலைவர் மணிவண்ணன்,தொழிலாளர் நல சங்க பொறுப்பாளர் தாமோ தரன்,பணியாளர்கள் நல சங்க பொறுப்பாளர் முத்து கிருஷ்ணன்,மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் பூமிநாதன்,நெல்லையப்பர் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பாலசுப்பிரமணி, பாப்புலர் கடை உரிமையாளர் வெங்கடேசன், ஜெகநாதன் திருக்கோவில் இஸ்கான் மற்றும் தொழிலதிபர்கள்,விவசாயிகள் உள்பட வாடிக்கையாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.ஜே சி குழுமத்தின் நிறுவனர் ஜெயபால் சார்பில் முதல் வாடிக் கையாளராக ரூ. ஒரு இலட்சம் வைப்பு நிதி கணக்கை செலுத்தி துவக்கி வைத்தார். நிகழ்ச்சியின் முடிவில் வங்கி உதவி மேலாளர் விக்னேஷ் நன்றி கூறினார்.மேலும் வங்கி யில் தங்க நகை கடன்,வீட்டுக் கடன்,வாகன கடன் திட்டம், தனிநபர் கடன் போன்ற சேவை கள் பெரியகுளம் புதிய கிளை வழங்கப்படுகிறது.

## ஸ்ரீபெரும்புதூரில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மாற்றுத்திறனாளி பெண்களுக்கு பயிற்சி மற்றும் இயந்திரங்கள் வழங்கல்

ஸ்ரீபெரும்புதூர் மார்ச்.11

ஸ்ரீபெரும்புதூரில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மாற்று திறனாளி பெண்களுக்கு தேவையான சுயதொழில் தொடங்குவதற்காக பயிற்சி மற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டது

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அடுத்த சந்தவேலூர் பகுதியில் பெண் கள் முன்னேற்ற அறக்கட்டளை மற்றும் பிளக்ஸ் இந்தியா இணைந்து மாற்று திறனாளி பெண்கள் சுயமாக யாருடைய



எதிர்பார்புமின்றி தங்களது வாழ்வாதரத்திற்கு தேவையான பொருளாதரத்தை ஈட்டும் வகையில் மறு சுழற்சி செய்யப் பட்ட காகிதத்தில் இருந்து பேப்பர் பேனா தயாரிக்கும் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் காஞ்சிபுரம் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் இயக்குனர் மலர்விழி, ஊராட்சி மன்ற தலைவர் வேண்டாமணி, மற்றும் பிளக்ஸ் இந்தியா நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு மாற்று திறனாளி பெண்களுக்கு சுயதொழில் தொடங்குவதற்கான மூலப் பொருட்களை வழங்கினர்.

மாற்று திறனாளி பெண்கள் வீட்டில் இருந்தே மாதந்தோறும் 5000 வரை அவர்கள் சம்பாதிக்க முடியும் என்றும் மாற்று திறனாளிகள் சுயதொழில் தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளை பெண்கள் முன் னேற்ற அறக்கட்டளை செய்யும் எனவும் பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளை இயக்குனர் திவ்யா தெரிவித்தார்

# கோயில் நிலத்தை தற்காலிக கடைகள் அமைக்க வழங்கக்கூடாது குன்னூரில் இந்து முன்னணி சார்பில் கையெழுத்து இயக்கம்

குன்னூர், மார்ச்11



நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான மார்க்கெட்டில் உள்ள 800 கடைகளை இடித்துவிட்டு புதிதாக கட்ட தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதில், 20 கோடி நகராட்சியின் பொது நிதியும், 21.50 கோடி ரூபாய் தமிழக அரசின் நிதியும் என மொத்தம் 41.50 கோடி ரூபாயில் பார்க்கிங் வசதியுடன் புதிய கடைகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக தற்காலிக கடைகள் அமைக்க திட்ட மிட்ட நிலையில், ஒரு பகுதி உழவர் சந்தை பகுதியிலும், சில கடைகள் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள விநாயகர் கோவில் அருகே உள்ள காலி இடத்திலும் அனுமதி பெற்று தற்காலிக கடைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்து முன்னணி சார்பில், கோயில் நிலத்தை தற்காலிக கடைகள் அமைக்க வழங்கக்கூடாது என வலியுறுத்தியும், மார்க்கெட் இடத்தில் பூ குண்டம் திருவிழா நடைபெற்று வரும் நிலையில் மார்க்கெட் விரிவாக்க திட்டத்தின் நகலை வைக்காதது ஏன் என்று கேட்டும் மார்க்கெட்டில் உள்ள வியாபாரிகளிடம் இந்து முன்னணி சார்பில் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாவட்ட இந்து முன்னணி செயலாளர் கார்த்திக் தலைமையில், இந்து முன்னணி நிர்வாகிகள் மார்க்கெட் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் கையெழுத்து இயக்கத்தை நடத்தி வருகின்றனர்.

# பழனியில் நம்பிக்கை சிறகுகள் அறக்கட்டளை சார்பில் மகளிர் தின விழா கொண்டாட்டம்

பழனி மார்ச்11



திண்டுக்கல் மாவட்டம் பழனியில் நம்பிக்கை சிறகுகள் அறக்கட்டளை சார்பில் சர்வதேச மகளீர் தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மகளிர் முன்னேற்றம், மகளிர் பாதுகாப்பு, பெண்சிசு பெருமை, பெண்குழந்தைகளை வளர்ப்பது, ஆகியவை குறித்த கருத்தரங்கு நடைபெற்றது. இதில் சுயமாக உழைத்து முன்னேறிய பெண்கள் பங்கேற்று தங்களது அனுபவங்களை எடுத்துரைத்தனர். இந்நிகழ்வில் நிறுவனத்தலைவர் ரமேஷ் மாரிமுத்து, குழந்தைகள் பாதுகாப்பு நலக்குழு தலைவர் ஜெயசுதா, சமூகநலத்துறை அதிகாரி புஷ்பகலா உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.22 தத்தனேரி மயானத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள ஓய்வு அறையினை மேயர் இந்திராணி பொன்வசந்த் , ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., ஆகியோர் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள் அருகில் துணை மேயர் .தி.நாகராஜன் , மண்டலத் தலைவர் சரவணபுவனேஸ்வரி ஆகியோர் உடன் உள்ளனர்.



மதுரை திருநகர் முத்துத்தேவர் முக்குலத்தோர் மேல்நிலைப் பள்ளியில் மகளிர் தினவிழா பள்ளித்தலைவர் சரவணன், பள்ளிச்செயலர் கண்ணன், இயக்குநர் முனைவர் நடனகுருநாதன் ஆகியோரின் முன்னிலையில் தலைமையாசிரியர் ஆனந்த் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றது.விழாவில் கலந்து கொண்ட இருபால் ஆசிரியர்களும் பெண்களின் பெருமையை எடுத்துரைத்தனர்.

# தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் கல்லலில் சர்வதேச பெண்கள் விழா கொண்டாட்டம்

கல்லல் மார்ச் 11



சிவகங்கை மாவட்டம் கல்லலில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கல்லல் கிளை மாணவ மாணவியர் குழு சார்பாக சர்வதேச பெண்கள் தின விழா நேற்று கொண்டாடப்பட்டது.

டாக்டர் முத்துலட்சுமி துளிர் இல்ல பொறுப்பாளர் சித்திரை செல்வி வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட பொருளாளர் பிரபு விழாவிற்கு தலைமையேற்றார். அறிவியல் பாடலை பாடியதுடன், சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்படுவதன் வரலாற்றுப் பின்னணியை தனது உரையில் குறிப்பிட்டார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வழக்கறிஞரும், குழந்தைகள் சட்ட சேவை குழு உறுப்பினருமான முருகேசன் இன்றைய சமுதாயத்தில் பெண்களின் பங்கு, பெண்கள் ஒவ்வொரு துறையிலும் முத்திரை பதித்து வருவது, பெண் குழந்தைகள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் போன்றவற்றைப் பற்றிய கருத்துக்களை எடுத்துரைத்தார்.

குருந்தம் பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சித்ராதேவி, கல்லல் கிளைச் செயலாளர் நித்யா வாழ்த்துரை வழங்கினர். சரியாக விடை அளித்த மாணவிகளுக்கு பரிசாக புத்தகங்கள் வழங்கப்பட்டது. சர் சி வி ராமன் துளிர் இல்ல பொறுப்பாளர் நாகரத்தினம் நன்றியுரை வழங்கினார். விழாவிற்கு வேண்டி ஏற்பாடுகளை கிளை செயற்குழு உறுப்பினர் மருதநாயகம் செய்தார். அறிவியல் இயக்க உறுப்பினர்கள் சாமிநாதன் சாந்தி ஜெயலட்சுமி ஆகியோருடன் திரளான அறிவியல் இயக்க மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் மகளிர் தின விழா

மதுரை, மார்ச்.11



தமிழ் நாடு சமூக நலத்துறை கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியமும் ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரியும் சுடரி ஃபவுண்டேசன் மற்றும் பயோனியர் ஃபவுண்டேசன் இணைந்து ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் மகளிர் தின விழா நடத்தப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து உடன் விழா தொடங்கியது. வேதியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் பூ சாந்தி வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் உறுப்பினர் ரேவதி அழகார் சாமி அவர்களும் மாவட்ட சமூக நல அலுவலர் திலகம் அவர்களும் பயோனியர் பவுண்டேஷன் மு .பால ரஞ் சனி அவர்களும் முன்னிலை வகித்தனர்.மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மா .செள .சங்கீதா சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்துகொண்டு பேருரை வழங்கினார். தமது உரையில் சங்க காலத்தில் பெண்கள் சுதந்திரமாக இருந்ததாகவும் அரசர்களுக்கே அறிவுரை கூறும் இடத்தில் இருந்ததாகவும் கூறினார். இடைக்காலத்தில் பெண் சுதந்திரத்தில் ஒரு தொய்வு ஏற்பட்டதாகவும் தற்காலத்தில் பெண்கள் சுதந்திரத்துடன் செயலாற்றுபவர்களாக உள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

மகளிர் தினம் விழாவிற்காக கல்லூரியில் ரங்கோலி, மாறுவேடப் போட்டி, வினாடி வினா ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் வெற்றி பெற்று முதல் மூன்று இடத்தைப் பிடித்த மாணவிகளுக்கு பீமா ஜுவல்லர்ஸ் நிறுவனம் பரிசுகளை வழங்கினார்கள்.

ஆங்கிலத் துறை இணை பேராசிரியர் முனைவர் ஈ.பிரேமா நன்றி உரை வழங்கினார். டிஜிடல் சகி அமைப்பு கடைகள் நடத்தினர். இவற்றைக் கண்ட மாணவிகள் தாங்களும் தொழில்முனைவோராக விரும்புவதாகக் கூறினர். நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவடைந்தது.



மதுரை மாவட்ட புதிய மாவட்ட வருவாய் அலுவலராக க.அன்பழகன் பொறுப் பேற்றுக் கொண்டார்.

# கன்னியாகுமரியில் கர்ப்பிணிகளுடன் மருத்துவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி

கன்னியாகுமரி, மார்ச்.11



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி அகஸ்தீஸ்வரம், குருந்தன் கோடு மற்றும் இராஜாக்க மங்கலம் வட்டாரத்தை சேர்ந்த 24 கர்ப்பிணித் தாய்மார்கள் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆசாரிப்பள்ளத்திற்கும், தக்கலை வட்டாரத்தை சேர்ந்த 17 கர்ப்பிணித் தாய் மார்கள் தக்கலை அரசு மருத்துவமனைக்கும், மேல்புறம் வட்டாரத்தை சார்ந்த 15 கர்ப்பிணித் தாய்மார்கள் குழித்துறை அரசு மருத்துவமனைக்கும், தோவாளை வட்டாரத்தை சார்ந்த 5 கர்ப்பிணித் தாய்மார்கள் பூதப்பாண்டி அரசு மருத்துவமனைக்கும், திருவட்டார் வட்டாரத்தை சார்ந்த 3 கர்ப்பிணித் தாய்மார்கள் குலசேகரம் அரசு மருத்துவமனைக்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலைய சமுதாய சுகாதார செவிலியர்கள், பகுதி சுகாதார செவிலியர்கள், கிராம சுகாதார செவிலியர்களால் அழைத்துச் செல்லப்பட்டு கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அரசு மருத்துவமனைகளில் உள்ள மகப்பேறு மருத்துவர்களுடன் கலந்துரையாடல் செய்து அவர்கள் சந்தேகங்களை நிவிர்த்தி செய்யவும் அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் சேவைகளை குறித்து அறிந்துகொள்ளவும் வழிவகை செய்யப்பட்டு மகப்பேறு மருத்துவர்களால் எடுத்துரைக்கப்பட்டது.



கன்னியாகுமரி மாவட்டத்தில் பறவைகள் கணக்கெடுப்பு பணி நேற்று தொடங்கியது இதில் சுசீந்திரம்,தேரூர், அச்சங்குளம்,புத்தளம் உள்ளிட்ட 25 தேர்ந்தெடுக்கப்பட்ட ஈர நிலப்பகுதியில் 90 குழுக்கள் சென்று பறவைகளின் எண்ணிக்கையை பதிவு செய்த நிலையில் முதற்கட்டமாக 120 க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும்,நீலத்தவளை,பூங்குருவி,நெட்டைக்காலி கொக்கு,கதிர் குருவி, மலை இருவாச்சி, மரங்கொத்தி,மஞ்சள் கண் சிலம்பான் உள்ளிட்ட பல்வேறு பறவைகள் கண்டறியப்பட்டுள்ளன,மேலும் பல்வேறு பகுதிகளின் வாழ்விடங்கள் அளிக்கப்பட்டு இருப்பதும் கணக்கெடுப்பு குழுவினர் தெரிவித்துள்ளனர்.




அகில இந்திய தெலுங்கு சமயம் சார்பாக மன்னர் பிறந்த நாள் விழாவும் மகளிர் தின விழாவும் சிறப்பான கொண்டாடப்பட்டது ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் என்பது டாக்டர் அனில் குமார் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு தலைமை டி எம் நாயுடு தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத் துணைத் தலைவர் சுருதி ரமேஷ் துணைத் தலைவர் சப்னா மகாராஜன் மாநிலத் துணைச் செயலாளர் சென்றாய பெருமாள் அமைதி புயல் ரங்கராஜ் மதுரை மாவட்ட நாயுடு மகாஜன சங்க செயலாளர் ஜெகநாதன் மாநிலச் செயற்குழு உறுப்பினர் வெங்கடேசன் மாவட்ட இளைஞர் அணி தலைவர் ராம் குமார் முருகேச பாண்டி சுதர்சன் கவிதா துர்கா சாந்தமா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்

# காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக செயல் வீரர்கள் கூட்டம்

கூடுவாஞ்சேரி, மார்ச்.11




செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் மண்ணிவாக்கத்தில் நடைபெற்றது. இதில் வரலட்சுமி மதுசூதனன் எம்எல்ஏ பங்கேற்றார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் மண்ணிவாக்கத்தில் உள்ள சமுதாய கூடத்தில் நடைபெற்றது. இதில் ஒன்றிய அவை தலைவர் ஜே.வி.எஸ் ரங்கநாதன் தலைமை தாங்கினார். ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள் குணா, ஆறுமுகம், பொன்னுசாமி, கருணாகரன், பத்மநாபன், ஸ்ரீகாந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.டி.லோகநாதன் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு தொகுதி எம்எல்ஏ வரலட்சுமிமதுசூதனன் கலந்துகொண்டு செயல் வீரர்கள் கூட்டத்தை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். அப்போது வருகிற 11ம் தேதி செங்கல்பட்டுக்கு வரவுள்ள தமிழக முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும். மேலும் அனைத்து ஊராட்சிகளில் இருந்து திமுக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் பங்கேற்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார். இதில் ஒன்றிய கவுன்சிலர்கள் நேதாஜி, கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் காரனைப்புதுச்சேரி நளினிஜெகன், நெடுங்குன்றம் வனிதாஸ்ரீசீனிவாசன், துணை தலைவர்கள் ஊரப்பாக்கம் ரேகாகார்த்திக், மண்ணிவாக்கம் சுமதிலோகநாதன், நிர்வாகிகள் ராஜன் ஆறுமுகம், ரத்தினமங்கலம் முனுசாமி உட்பட 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். முடிவில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.எஸ். கார்த்திக் நன்றி கூறினார்.

# பழனியில் மகளிர் தினத்தை முன்னிட்டு தவெக சார்பாக 1500 நபர்களுக்கு இலவச சேலை அன்னதானம்

பழனி மார்ச்11



பழனியில் மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக 1500 நபர்களுக்கு இலவச சேலை மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது..

திண்டுக்கல் மாவட்டம் பழனி புதிய தாராபுரம் ரோட்டில் அமைந்துள்ள தனியார் மஹாலில் மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா தலைமை மற்றும் கழக இணைச் செயலாளர் விஜய்சிவா மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் ஆகியோர் ஏற்பாட்டில் மகளிர் தினத்தை முன்னிட்டு 1500 பெண்களுக்கு இலவச சேலை மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது

இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் பொதுமக்களிடம் பெண்களுக்குள் பணிவு, துணிவு, பண்பு, அன்பு, பாசம், ஒழுக்கம், காதல், கனிவு, கோபம், வருத்தம், தயக்கம், கூச்சம், அச்சம், தாய்மை என இவைகள் அனைத்தும் கொண்டவள்தான் பெண்மை. பெண் என்பவள் போற்றத் தகுந்தவள். மதிக்கத் தகுந்தவள். வணங்கத் தகுந்தவள். பல தகுதிகளுக்கு உள்ளானவர்கள் பெண்கள். பூமியில் பிறந்த பெண், மகளாய், தங்கையாய், அக்காவாய், அண்ணியாய், மனைவியாய், நாத்தனாராய், மாமியாராய் , பாட்டியாய் இப்படி பல இடங்களிலும் பல விதங்களில் பிறவிகள் எடுத்துள்ளவர்தான் பெண் என கூறினார் அதனை தொடர்ந்து இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜ் இளைஞர் அணி.ஆசாத்.பிரவீன். மகளிர் அணி கலைச்செல்வி சுபாஷினி நாகராணி விஜயலட்சுமி சந்தானலட்சுமி மற்றும் மாவட்ட நகர ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்..








சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் உள்ள முள்ளியாரேந்தல் , கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு கானமுடையார் அய்யனார் ஆலம்பச்சேரி,அதிகரை ,நாடாமங்கலம் கிராம பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட திருக்கோவிலில் மாபெரும் கும்பாபிஷேகம் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு கானமுடையார் அய்யனார் அருள் பெற்று சென்றனர். பின்னர் அன்னதானமும் வழங்கப்பட்டது.

# சிவகங்கை மாவட்டத்தில் 51 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது



சிவகங்கை, மார்ச்.11

சிவகங்கை மாவட்டத்தில் கடந்த ஆண்டு மொத்தமாக 51 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து தற்போது வரை மட்டும் இதுவரை மொத்தம் 18 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். (போதைப் பொருள் வழக்கில் 1நபர், கொலை கொலை முயற்சி குற்றங்களில் ஈடுபட்ட 8 நபர்கள்,போக்சோ வழக்குகளில் தொடர்புடைய 5 நபர்கள் மற்றும் திருட்டு குற்ற வழக்குகளில் தொடர்புடைய 4 நபர்கள்). மேலும் கொலை, கொள்ளை மற்றும் போதைப்பொருள் தொடர்பான வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்களை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கென தனியாக ஒரு சார்பு ஆய்வாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு குண்டர் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் கண்காணிக்கப்பட்டு அவர்களின் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதை மக்கள் பாராட்டுகின்றனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள ஆணைக்குளம் கிராமத்தில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு வீரத்தாய் குயிலி பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளை சார்பில் பள்ளி குழந்தைகளுக்கு இலவச நோட்டு வழங்கும் நிகழ்ச்சி அன்று நடைபெற்றது. பெண்கள் எவ்வாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதை பற்றியும் விழிப்புணர்வு நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை வீரத்தாய் குயிலி பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளை நிறுவனர் ஆ. குயிலிஅய்யனார் தலைமையில் செய்திருந்தனர்இந்த நிகழ்ச்சியில் வீரத்தாய் கோயிலில் வம்சாவளிகள் வீ.கரிசல்,சு. கணேசன், நா.முத்தையா, கூத்தாண்டன் பால்பாண்டி, நெல்கட்டும் செவல் ஒண்டிவீரன் வாரிசுதார் ஒண்டிவீரன் ஆறுமுகம், முறம்பு வீ. லட்சுமணப்பெருமாள், ஆனைகுளம் வீ. ஈஸ்வரன், ஒண்டிவீரன் அ.கண்ணன் மற்றும் ஏராளமான பெண்கள் பள்ளியில் பயிலும் மாணவிகள் உட்பட பலர் பங்கேற்றனர்..




சென்னை மயிலாப்பூரில் சர்வதேச உலக மகளிர் தினத்தை முன்னிட்டு 50 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் அஜந்தா பைன் ஆர்ட்ஸ் சார்பில் சாதனைப் பெண்மணிகள் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்நாடு பெண் உரிமை பாதுகாப்பு சங்கம் தலைவர் சித்ரா அரவிந்தன் வரவேற்பு உரையாற்றினார், மகிளா காங்கிரஸ் துணைத் தலைவர் டாக்டர் சாந்தி ஜோசப் முன்னிலை வகித்தார், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் தலைவர் குமாரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சாதனை பெண்களுக்கு விருதுகளை வழங்கினார் . திரைப்பட நடிகர்கள் சின்னத்திரை நட்சத்திரங்கள் கலந்துகொண்டு விருதுகளை பெற்றுக் கொண்டனர். இதில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி 6வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் சண்முகப்பிரியா செல்வம் சிறப்பாக செயலாற்றி வரும் சிறந்த வார்டு உறுப்பினர் மக்கள் சேவைக்கு சிறந்த ஆளுமை மற்றும் சாதனை பெண்மணிக்கு சேவை ரத்தன விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.






## அசல் பத்திரம் காணவில்லை

கடந்த 06 .03 .2025 அன்று சிவகங்கைமதுரை முக்கு பகுதியில் இருந்து பத்திரப்பதிவாளர் அலுவலகம் சென்று எதிரே உள்ள ஜெராக்ஸ் கடைக்கு சென்றபொழுது கைப்பையில் இருந்த எனது அசல் பத்திரம் (ஆவண எண் 732/2011) கோர்ட் வாசல் டு மதுரை முக்கு பகுதிக்குள் தவற விட்டு விட்டேன். வீட்டிற்கு சென்று பார்த்த போது காணவில்லை. நான் பல இடங்களில் தேடியும், விசாரித்தும் கிடைக்கவில்லை. ஆகவே, காணாமல் போன எனது பத்திர ஆவணங்களை தாங்கள் ஏதும் காணும் பட்சத்தில் அருகில் உள்ள காவல் நிலையத்திலோ அல்லது கீழ்க்கண்ட எனது அலைபேசிக்கோ அல்லது முகவரிக்கோ தெரியப்படுத்தும் படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

**T.N. இராஜவர்மன்**

செல் : 9944117133

15/1 சேண்ட் பீல்
அப்பார்ட்மெண்ட் யிழி நகர்
வள்ளுவர் காலனி ஆனையூர்

மதுரை.

இணையதளபுகார் மனு எண்

(**CAT 25125727**)






Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No 122 Neethipathi Rajasekaran Street